[*1994 ஜனவரி 3*

134–

தமிழகக் கோயில்களில் 'வள்ளுவர் அறிவகம்' தொடங்குதல்.

16457–*திரு. செ. து. வரதராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) தமிழகக் கோயில்களில் 'வள்ளுவர் அறிவகம்' தொடங்க உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மொழியினுடைய அறக்கட்டளையின் சார்பாக வள்ளுவர் அறிவகம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதனை நடைமுறையிலே செயலாற்றி, திருக்கோயில்களிலே ஆகமங்களும், வேத பாராயணங்களும் சமஸ்கிருத மொழியிலே வேத பள்ளிகள் அமைத்து இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் வள்ளுவர் அறிவகம் அமைத்து, ஒவ்வொரு திருக்கோயிலிலும் தமிழ் தழைக்கவும், உலக மறையாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறளை மக்கள் புரிந்து கொள்கின்ற வகையிலேயும், மனநிறைவு பெறுகின்ற வகையிலேயும், அதனை திருக்கோயில்களிலே அறிமுகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகக் கோயில்களில் 'வள்ளுவர் அறிவகம்' தொடங்க உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை. உலகத் தமிழ் அறக்கட்டளை என்னும் அமைப்பு ஏதும் இயங்கவில்லை. திருக்குறளை மக்கள் மத்தியில் பரப்புவதற்குத் திருக்குறள் நெறிபரப்பு மையம் என்னும் அமைப்பு அரசால் அமைக்கப்பெற்று, திருக்குறளார் வி. முனுசாமி அவர்களை இயக்குநராகக் கொண்டு தனித் துறையாக இயங்கி வருகிறது. இவர்

1994 ஜனவரி 3]

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாகச் சென்னை மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், வள்ளுவர் கோட்டம் முதலிய இடங்களில் வாரந்தோறும் திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறார். திருக்குறள் நெறிபரப்பு மையம் மூலமாகத் தமிழகக் கோயில்களில் வள்ளுவர் அறிவகம் தொடங்க தற்போது திட்டம் ஏதுமில்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் திருக்குறளினுடைய வாசகங்களைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ளுகின்ற அளவிலே எழுதி வைக்கின்றபோது, அதைப்போல திருக்கோயில்களிலே அங்கேயிருக்கின்ற கல்தூண்களிலே ஒவ்வொரு திருக்குறள் வாசகங்களை வைக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட ஆலயங்களிலிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு அறநிலையத் துறை மூலமாகக் கோரிக்கை வருமானால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 135, திரு. ஆர். டி. அரங்கநாதன்; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

135–

விருத்தாசலம் நகராட்சியில் புதிய குடியிருப்புப் பகுதிகளுக்குப் போதிய வசதி செய்து கொடுத்தல்

*9495–**திரு. ஆர்.டி. அரங்கநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாக நகராட்சி நிர்வாகத்தின் கீழ் வரி வசூல் (வீட்டு வரி) செய்யப்படாமலும், அப்பகுதி மக்களுக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் போதிய வசதிகள் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அதுபோன்ற குடியிருப்பு பகுதிகளுக்கு நகராட்சி நிர்வாகத்தின் கீழ் போதிய வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,